# கலாதீபம்

கலாதீபம் (Sinhala)

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.05.2025 | தீபம் 35


## உலக சுகாதார நாளைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடல்

### யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது மருத்துவ நிபுணர்

### டாக்டர் த.பேரானந்தராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக சுகாதாரநாளை சிறப்பிக்கும் ஒன்றுகூடல் 09.04.2025 புதன் காலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் யாழ் போதனா வைத்திய சாலையின் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்



## உலகப் புகழ்பெற்ற சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நிபுணர்

### பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்தார்

உலக சுகாதார நாளை ஒட்டிய சிறப்பு ஒன்று கூடல் (Assembly) கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 02.04.2025 காலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

அமெரிக்க சான்போட் (SANFORD) மருத்துவ கல்லூரியின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை பேராசிரியரும் வைத்திய நிபுணருமாகிய தவம் தம்பிப்பிள்ளை (PROF. THAV) கலந்து சிறப்பித்தார்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்



01.04.2025 — 30.04.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## இந்திய தமிழக அரசின் ஆளுநர் விருது பெற்ற கலாசாலை அதிபருக்கு கலாசாலையில் பாராட்டு

இலக்கிய பேச்சுத்துறையூடாக தமிழ்ப் பணி புரியும் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தமிழ்நாடு ஆளுநர் மாண்புமிகு ஆர் என் ரவி அவர்களிடம் இருந்து தமிழக ஆளுநர் விருதை அண்மையில் (05.04.2025) பெற்றுக் கொண்டமையை ஒட்டி கலாசாலை விரிவுரையாளர் கழகத்தினரும் ஆசிரிய மாணவ மன்றத்தினரும் கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற புதன்(09.04.2025) காலை ஒன்று கூடலின் போது அதிபருக்கான கௌரவிப்பை மேற்கொண்டனர்.

இதன்போது நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டிருந்த வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா கலாசாலை சமூகத்தின் சார்பில் அதிபரை கௌரவித்தார்.

ஆசிரிய மாணவி எஸ் எ.்.ப் நுஸ்லா காணொளி காட்சிகளுடன் பாராட்டுக் கவிதை படித்தார்





கலாதீபம்
කලාදීපම KALADEEPAM
கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

### ஆசிரியர் கல்வியும் வகுப்பறைச் செயற்பாடுகளும்

" எந்த ஒரு நாடும் அந்நாட்டின் ஆசிரியர்களின் தகுதிக்கும் மேலாக உயர்ந்துவிட முடியாது" என்பதோர் பொன்னுரை. எனவே ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும் அதன் ஆசிரியர்களிடமே விடப்பட்டுள்ளது.

ஆசிரியர் உயர அவர்தம் நோக்குயர, போக்குயர, வாக்குயர நாடே உயரும். எனவே ஆசிரியர்களைக் கல்வியால், பயிற்சியால், தகுதியால், திறனால், தொழிலறத்தால் உயர்த்தியே எந்நாடும் உயர முடியும்.

வகுப்பறைச் சூழல் ஒவ்வொரு நாளும் புதிர் பொதிந்த ஒன்றாகும். ஒரே பாடப் பொருள் வெவ்வேறு மாணவர்களிடம் வெவ்வேறு பிரதிபலிப்பைத் தரும். புதிய புதிய வினாக்கள் மாணவர்களிடமிருந்து எழும்போது, புதிய புதிய கருத்துக்கள் ஆசிரியருக்கு கிடைக்கும். அதே நேரத்தில் பாடப்பொருள் மாணவர்களிடம் சேரும் விதத்தில் பலதரப்பட்ட சிக்கல்கள் எழும். ஆசிரியர் சிக்கல்களை அதன் தன்மைகளைக் கொண்டு பகுத்தறிந்து தீர்வு காண வேண்டும். பிரச்சினைகளை ஆராய்ந்து உடனுக்குடன் அச்சூழ்நிலைக்கு ஏற்ப தீர்வு காண முற்படுகை யில் ஆசிரியர் ஒரு செயல் ஆய்வாளராக செயல்படுகிறார்.

இவ்வாறான வகுப்பறை நிலைமைகளை கையாளுவதற்கு ஆசிரியர்களுக்கு காலத்திற்குக் காலம் பயிற்சிகள் தேவைப்படுகின்றன. அவற்றை செவ்வனே நிறைவேற்றும் போது ஆளுமை மிக்க ஆசிரியர்கள் உருவாகிறார்கள்.

## கலாசாலையின் மூத்த விரிவுரையாளருக்கு கௌரவம்

கலாசாலையின் மூத்த விரிவுரையாளர் பொன்னுத்துரை சற்குணநாதன் அண்மையில் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவின்போது கல்வி முதுதத்துவமானி (M.Phil.in Education) பட்டத்தை பெற்றுக் கொண்டமையையிட்டு கலாசாலை சமூகத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்

கலாசாலையில் 02.04.2025 புதன்கிழமை காலை நடைபெற்ற ஒன்று கூடலின்போது (Assembly) இக் கௌரவிப்பு இடம்பெற்றது.

இவருக்கான பொன்னாடையை நிகழ்வின் அதிதியாக்கலந்து கொண்ட உலக புகழ்பெற்ற சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை அவர்கள் போர்த்தினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் மாலை அணிவித்துக் கௌரவித்தார்.





# News in Brief - Month of April

**02.04.2025**
**The Wednesday Assembly**
**World Health Day**

World-renowned kidney transplant surgeon Professor Thavam Thambipillai was the guest of honor. Prof. Thavam Thambipillai (PROF. THAV), Professor and Medical Specialist in Renal Transplant Surgery at the American Sanford Medical College, participated and spoke.

A narrative film on World Health Day, produced by teacher student Nirojan Kaushik, was screened.

**09.04.2025**

**The Wednesday Assembly**
**World Health Day**

Dr. T.Peranantharaja, General Physician at Jaffna Teaching Hospital, was the guest of honor at the event.

The event, hosted by Christianity course teacher student Sudhakar Kamalini, featured. Physical Education course teacher student Vimalraj Ushanandini, who spoke on the topic of "Let's Maintain Physical Fitness." Senior Lecturer Surendran Sivalosani delivered the introductory speech.

**09.04.2025**

**The College Principal who received the Governor's Award from the Government of Tamil Nadu, India, was felicitated at the College.**

The College Principal Santhiramouleesan Laleesan, who works in Tamil through the Department of Literary and Speech, recently (05.04.2025) received the Tamil Nadu Governor's Award from the Hon. Governor of Tamil Nadu, R.N. Ravi.

The College's Lecturers' Guild and the Teacher students felicitated the Principal at a meeting held on Wednesday morning.

**14.04.2025**
**Tamil New year**

A Special Pooja was held at the College Shiva Temple on the occasion of the Vishwavasu Tamil New Year. The temple's chief priest, Shivasri Pa. Selvasena Kurukkal conducted the pooja.

**23.04.2025**
**The Wednesday Assembly**

was held under the chairmanship of the Principal of the College, Santhiramouleesan Laleesan**.**

The Guest Speaker was Mrs. Jayalakshmi Udayakumar, who recently retired from the Jaffna National College of Education.

The highlight of Easter Sunday was a speech delivered by Ms. T.Belini , a teacher student of the Science Course. This was followed by a video presentation of the crucifixion of Jesus.

Highlighting the event of the Thirunavukkarasu Nayanar Guru Pooja, Mr.Ilagunathan Senthur selvan, a teacher student of the Science course, gave a speech on the topic of "My debt is to be done."

**30.04.2025**

**Teachers' College Final Examination**

The Sri Lanka Examinations Department has announced that the final examination conducted by the Examinations Department for Teacher students for the 2022/2023 academic year will be held from Monday, 19. 05.2025 to Saturday, 24.05.2025.

# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# உடல் ஆரோக்கியம் பேண சில ஆலோசனைகள்
# வைத்தியநிபுணர் டாக்டர் த.பேரானந்தராஜா

முதலாம் பக்கத்தொடர்ச்சி.......

இந்நிகழ்வினை

கிறிஸ்தவநெறி ஆசிரியர் மாணவி சுதாகர் கமலினி முன்னிலைப்படுத்தலில் நடை பெற்ற இந்நிகழ்வில் உடற்கல்விநெறி ஆசிரிய மாணவி விமல்ராஜ் உஷாநந்தினி உடற் பருமனை பேணுவோம் என்ற தலைப்பில் உரை யாற்றினார்.

மூத்த விரிவுரையாளர் சுரேந்திரன் சிவலோசனி அதிதி அறிமுக உரையை ஆற்றினார்.

அதிதியாக கலந்து கொண்ட வைத்திய நிபுணர் த. பேரானந்தராஜா கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமையும் உலக சுகாதார நாள் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது இதன் போது பேராசிரியர் தவம் தம்பிபிள்ளை அதிதியாக கலந்து சிறப்பித்து இருந்தார்














# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை பற்றிய விழிப்புணர்வு
# வைத்தியநிபுணர் பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை

முதலாம் பக்கத்தொடர்ச்சி.......

ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வை ஆசிரிய மாணவி திருமதி தர்மினி சம்பத்குமார் முன்னிலைப் படுத்தினார்.

டேவிட் லிஜானி அதிதி அறிமுக உரையை ஆற்றினார். தினேஸ் கௌசியா ஆரோக்கியமான வாழ்விற்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் ஒழுக்கங்கள் என்ற பொருளில் உரை ஆற்றினார்.

ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா தய-ாரித்த உலக சுகாதார நாளை ஒட்டிய விவரண படம் காட்சிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை 2023 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் முதன் முதலில் தாய் ஒருவரின் சிறுநீரகத்தைப் பெற்று அவரது மகளுக்கு பொருத்தி சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை ஆரம்பித்து வைத்திருந்தார். இதனை கௌரவிக்கும் வகையிலும் கலாசாலைக்குரிய திறன் பலகை (Smart Board) வகுப்பறை அமைவதற்கு உறுதுணை புரிந்த வகையிலும் கலாசாலை சமூகத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.












# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் (ஓய்வுநிலை விரிவுரையாளர்)
## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி
## கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புதன் ஒன்றுகூடல் 23.04.2025 காலை 08.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலை-லமையில் இடம்பெற்றது.

இதில் அதிதி பேச்சாளராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து அண்மையில் இளைப்பாறுகை பெற்ற திருமதி. ஜெயலட்சுமி உதயகுமார் கலந்து சிறப்பித்தார்.

கணித விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் திருமதி. கீற்றா தவராசா நெறிப்படுத்தலில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் ஈஸ்டர் ஞாயிறு சிறப்பம்சமாக உரை இடம்பெற்றது. இதனை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி திருமதி. பெலினி சசிராசன் ஆற்றினார். இதனைத்தொடர்ந்து இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகள் காணொளி மூலம் காட்சிப்படுத்தப்பட்டன.

சித்திரச்சதையம் திருநாவுக்கரசு நாயனார் குரு பூசையாக அமைந்த சிறப்பை வெளிப்படுத்தி விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர் திரு. இளகுநாதன் செந்தூர்ச்செல்வன் மூ”என் கடன் பணி செய்து கிடப்பதே”மூ என்ற பொருளில் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து அதிதிப்பேச்சாளருக்கான அறிமுக உரையை கலாசாலையின் உப அதிபர் திருமதி. சத்தியா ரஜ்ஜித் அம்மையார் மேற்கொண்டார்.

அதிதியாக கலந்து கொண்ட திருமதி. ஜெயலட்சுமி உதயகுமார் தனது வாழ்வியல் அனுபவங்களை குறிப்பிட்டதோடு மூஆசிரியரும் மென்திறன்களும்மூ என்ற கருப்பொருளில் உரையாற்றினார். அதிதி கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.













# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# கே.கேந்திரன், சி.சிவதர்சன் (பட்டயக் கணக்காளர்கள்)
# இயக்குனர்கள் LANKA TAX AUDITORS
# கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதன் ஒன்று கூடல் 30.04.2025 அன்று காலை 8.30 மணிக்கு கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது

வருமானவரி பற்றிய அறிமுகமாகவும் வரி செலுத் துனர் அடையாள இலக்கம் (**TIN**) பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை தொடர்பான விழிப் புணர்வை வழங்குவதாகவும் இந்த ஒன்று கூடல் இடம்பெற்றது.

இதன் வளவாளர்களாக **LANKA TAX AUDITORS** நிறுவனத்தின் (இல.297, பிறவுண் வீதி, யாழ்ப் பாணம்.) இயக்குநர்களான பட்டையக் கணக்காளர் கே.கேந்திரன் அவர்களும் கணக்காளர் சி.சிவதர்சன் அவர்களும் இணைந்து கல நது துகொண்டனர்.

முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் நிகழ்வினை நெறிப் படுத் தினார். கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில் குமரன் அதிதிகளை வரவேற்று அறிமுக உரையை ஆற்றினார்.


அரசின் வரிக்கொள்கை தொடர்பாகவும் தனிநபர் ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரி தொடர் பாகவும் விளக்கமளிக்கப்பட்டதுடன்.**TIN** இலக்கம் ஒன்றைப் பெறுவது தொடர்பான செயல்முறை அறிவும் வளவாளர்களால் வழங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து சபையோரின் சந்தேகங் களுக்கு வளவாளாளர்கள் தமது தெளிவூட்டல் களை வழங்கினர்.

இதேவேளை வளவாளர்கள் இருவரும் கலாசாலை சமூகத்தினரால் பொன்னாடைபோர்த்தி மதிப்பளிக் கப்பட்டனர்.

தனியார் நிறுவனமாக இருந்தபோதிலும் கலாசாலை செயற்பாடுகளுக்கு மதிப்பளித்து வளவாளர்கள் இருவரும் சேவை அடிப்படையில் தமது நிபுணத் துவ ஆலோசனைகளை வழங்கினர்.












# கலாசாலையில் புதுவருட பூசை

விசுவாவசு புதுவருட பிறப்பையொட்டி கலாசாலை சிவன் ஆலயத்தில் விசேட பூஜை

விசுவாவசு புது வருட பிறப்பை ஒட்டி கலாசாலை சிவ ஆலயத்தில் விசேட பூஜை இடம் பெற்றது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக் குருக்கள் பூசையை நடத்தினார்

தொடர்ந்து கலாசாலை அலுவலகத்தில் நாள் வேலை ஆரம்பிக்கப்பட்டதுடன் கை விசேடமும் பரிமாறப்பட்டது.







# கலாசாலை இறுதிப் பரீட்சை

2022/2023 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களுக்காக பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இறுதி பரீட்சை எதிர்வரும் 19.05.2025 திங்கட்கிழமை தொடக்கம் 24.05.2025 சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது என்று இலங்கை பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த அணியினருக்கான கற்கைநெறி கடந்த 2024 டிசம்பர் மாதம் நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது




# கலாசாலைகளுக்கான தவணை விடுமுறை

நாடு முழுவதிலும் உள்ள எட்டு ஆசிரிய கலாசாலைகளுக்குமான முதலாம் தவணை விடுமுறை 10.04.2025 தொடக்கம் 21.04.2025 வரை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான விடு முறை வழங்கப்பட்டது.

இது தமிழ், சிங்கள புத்தாண்டினை வரவேற்கும் விடுமுறையுடன் கூடியதாகவும் அமைந்திருந்தது.

இதேவேளை கலாசாலையின் அலுவலக பணிகள் யாவும் வழமைபோல் இடம்பெற்றன.

# மேடைகளை ஆளும் தமிழ்
# புதன்கிழமைகளில் இங்கும் கண்டோம்

செந்தமிழால் உலகாளும் சொல்லருவி

எங்கள் கலாசாலையை ஆளும் நல்லருவி

தமிழகம் சென்று ஆளுனரின் விருது வென்று வந்து

எமக்கெல்லாம் பெருமை சேர்த்தீர்

சொல்லாண்ட தமிழாலே வாழ்த்துகிறோம்

கலாசாலை சமூகமாய் நாமே

நீவிர் பல்லாண்டு வாழ்க!

மேடைகளை ஆளும் தமிழ் புதன்கிழமைகளில்

இங்கும் கண்டோம்

ஊடகங்களில்…... ஊர்க் கோயில்களில்…...

எங்கும் கண்டோம்

மதங்கடந்து பிற மதங்களையும்

மதிக்கின்ற தகைமையாளர்

காலைப் பிரார்த்தனைகளில் கருத்துரை

புதன்கிழமை ஒன்றுகூடல்களில் நிறைவுரை

கலாசாலை நிகழ்வுகளில் தலைமையுரை சிறப்புரை

சொற்சமர் நிகழ்ச்சிகளில் விவாத உரை

அற்புதக் கோயில்களில் ஆன்மீக உரை

இன்னும்

வாழ்த்துரை வெளியீட்டுரை நயப்புரை

என வகைவகையாய் தனக்கென
தனிப்பாணியமைத்து

சொல் பொழியும் இவர் திறம் கண்டு

அன்று வழங்கினர்

செந்தமிழ்ச் சொல்லருவிப் பட்டம்

இன்றும் தொடரும் இவர் பணிச் சிறப்புணர்ந்து

கடல் கடந்து



தமிழகம் மதித்த ஈழத்துப் பேச்சுலகின்

ஆளுமையாளராய் உயர் மதிப்பு

தமிழக ஆளுனர் விருது

உவகை கொண்டு வாழ்த்துகிறோம் நாமே

இன்னும் உயரங்கள் தொட இதயத்தால்
வாழ்த்துகிறோம் உம்மை..

இந்தியா தமிழ்நாடு ஆளுநர் விருது பெற்ற கலாசாலை அதிபருக்கு கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் சார்பில் 09.04.2025 வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இதன் போது விசேட கல்வி ஆசிரிய மாணவி திருமதி ஸா ஜஹான் பாத்திமா நுஸ்லா சமர்ப்பித்த கவிதை



# THE GRADE-5 SCHOLARSHIP EXAMINATION



**Mrs S.Dharmini**
**English Course**
**Teacher Student**
**2023/2024**

I'm delighted to greet a warm welcome for all the dignitaries and thanks for joining us. Let me introduce myself first, I'm Dharmini from second year English Course. Sri Lanka is facing tough times right now and it's grasping social, economic, and political challenges and navigating different directions for different reforms; among these, The Grade 5 scholarship examination is at the top of the stories. That's my topic today.

The grade 5 scholarship examination is highly competitive and significant in Sri Lankan education. It serves as a gateway to access the prestigious National schools and the scholarship beneficiary. It accesses the students' knowledge and skills in various subjects like Language, Mathematics, and General Knowledge. It's designed to identify academically gifted students at a very young age.

However, it's been a subject of debate and criticism. On the one hand, some argue that it creates undue pressure on Students and promotes excessive competition another hand some argue that it nurtures students learning especially those who are from disadvantaged backgrounds. Despite these controversies it remains a milestone in the education system. It can open the door for better educational opportunities and shape the future path and career. As it's a debated topic, we have enough strong points both for and against its existence.

Let me break down the advantages first.

Access to better education. It provides the opportunity for students to get into the prestigious National schools in their areas and where they can get many facilities and resources. we can have the example of how parents are struggling to get admission from schools like J/Vembadi Girl's High School and Jaffna Hindu College.

Another thing is scholarship. A successful Student can receive financial assistance and it alleviates the burdens of education and for the families as well. It serves as a tool to identify academically talented students and where they are allowed to gain and follow more and excel. Next, it motivates the students to study hard for their academic excellence and it promotes students a healthy sense of competition.

# THE GRADE-5 SCHOLARSHIP EXAMINATION ........

Now we look at the demerits of the Scholarship Program.

It puts undue pressure and stress on students at a very young age. It leads students to anxiety and even mental health issues as well. It primarily focuses on academic achievement and it is exam-oriented. Therefore it neglects the importance of aspects of the child's development like creativity, social skills, and importantly physical well-being. It encourages the Students to rote learning, repetition, and memorization. It neglects

creative thinking ability and problem-solving skills.

And the other one is inequity. It increases the inequality among students. Students who are from wealthier backgrounds can access the facilities and tuition resources as well but from the backward areas, Students can't get such facilities. A small amount of students get a pass from the exam and most of the others get disappointed and frustrated. Overall it is just a part of students' academic journey and it is equally important to focus on both holistic development of the child and nurture a love for learning in every child. Maybe in the future, we can explore an alternative way to find out the academically gifted students without giving them undue pressure and stress.

Thank you.



## துயர் பகிர்கிறோம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நீண்ட காலம் அதிபர் அலுவலகத்திற்கான சேவை உதவியாளராக கடமையாற்றி இளைப்பாறுகை பெற்றநடராசா சுப்பிரமணியம் (மணியம் அண்ணை)

17.04.2025 அவரது இல்லத்தில் காலமானார்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

